பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 6.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 14 திங்கட்கிழமை (29.12.2003) தொலைபேசி - 2223378 ஒலி 10

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# தேர்தல் ஆண்டாக புத்தாண்டு மலரும்

## ஜனாதிபதி அறிவிப்பு



மூன்று அமைச்சுக்களையும் ஜனாதிபதி பொறுப்பேற்றமையை அடுத்து பிரதமர் ரணில் விக்கிரம

(நமது நிருபர்)

**பிறக்கப் போகும் புத்தாண்டு இலங்கையின் அரசியல் வரலாற்றில் என்றுமில்லாதவாறு தேர்தல்கள் நடைபெறப் போகும் ஆண்டாக இருக்குமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.**

சிங்கா போலியான அரசியல் சிக்கலை ஏற்படுத்தியிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

மூன்று அமைச்சுக்களையும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை சோதனை நிலையம் இரவு 9 மணிவரை திறந்திருக்கும்

### பாதுகாப்பு படைத்தலைமையகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு முகமாலை இராணுவச் சோதனை நிலையம் இன்றிலிருந்து எதிர்வரும் 31ந் திகதி வரை இரவு 9 மணி வரை திறந்திருக்குமென யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.வழமையில் காலை 6.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை திறந்திருக்கும் முகமாலை இராணுவ சோதனை நிலையம் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு இரவு 9 மணி வரை திறந்திருக்கும்.

இந் நேரமாற்றத்தின்படி, பயணிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியே செல்வதற்கும் உள்ளே வருவதற்கும் அனுமதிக்கப்படுவர் எனவும்,

எனினும் மாலை 5.30 மணிக்குப் பின்னர் பொருட்களை எடுத்துச் செல்ல முடியாது எனவும் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (ச)

## முன்னாள்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழு இன்று யாழ்.வருகை

(திருநெல்வேலி)

முன்னாள் பாதுகாப்பு அமைச்ன் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ தலைமையிலான குழுவினர் இன்று யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் துரித அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாக கலந்துரையாடுவதற்காகவே அவர்கள் இங்கு வருகின்றனர்.

இன்று காலை விமானம் மூலம் பலாலி வரும் இவர்கள் காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் துரித அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளனர்.

பிரதமரின் அலுவலகச் செயலாளர் கே.சிவானந்தன், புனர்வாழ்வு அமைச்சின் திட்டப்பணிப்பாளர் கே.[illegible]மதேவன் ஆகியோர் இக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஒற்றுமையை வலியுறுத்தி கூட்டணித் தலைமைஅலுவலகம் முன்பாக நேற்று உண்ணா விரதம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தம்மிடையே உள்ள அபிப்பிராய பேதங்களை மறந்து ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து கொழும்பில் உள்ள தமிழர் விடு

யாள உண்ணாவிரதப் போராட்ட முடிவில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கும், செயலாளர் இரா.சம்பந்தனுக்கும் வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. அவ் வேண்டுகோளில்,

## வடக்கு புனர்வாழ்வு அமைச்சு அமைச்சர் மகேஸ்வரனுக்கு!

(திருநெல்வேலி)

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கு ஜனவரியில்

மென கூறப்படுகின்றது.

தற்போது வடக்கின் புனர்வாழ்வு அமைச்சராகக் கடமையாற்றும்

## வெளிநாடுகளுக்கு செல்ல வாய்ப்பு

(கொழும்பு)

இஸ்ரேல்,சிங்கப்பூர்,மலேசியா,

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கு ஜனவரியில் வடக்கின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வழங்கப்படவுள்ளதாக பிரதமருடன் நெருங்கிய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தற்போது இந்தியாவில் தங்கியிருக்கும் அமைச்சர் தி.மகேஸ்வரன் இலங்கை வந்ததும் இவ்விடயம் குறித்துத் தெரிவிக்கப்படு

தற்போது வடக்கின் புனர்வாழ்வு அமைச்சராகக் கடமையாற்றும் ஜயலத் ஜயவர்த்தனாவுக்கு வேறோர் அமைச்சு வழங்கப்படவுள்ளது. வடக்கின் புனர்வாழ்வு அமைச்சர் பதவியை ஜயலத் ஜயவர்த்தனாவுக்கு வழங்கியபோது அமைச்சர் தி.மகேஸ்வரன் எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ச-43)

(கொழும்பு)

இஸ்ரேல்,சிங்கப்பூர்,மலேசியா, கென்யா,ஜேர்மன், சைப்பிரஸ் ஆசிய நாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்புவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அவ்வாறு வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்பும் தொழிலாளர்க

(10ஆம் பக்கம் பார்க்க)

மென்ற கோரிக்கையை முன்வைத்து கொழும்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் காரியாலயத்திற்கு முன்பாக நேற்றுக் காலை தந்தை செல்வா நற்பணி மன்றத்தினர் அடையாள உண்ணாவிரதமொன்றை மேற்கொண்டனர்.

கொழும்பில் உள்ள தந்தை செல்வா நற்பணி மன்றத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த அடை

கப்பட்டுள்ளது. அவ் வேண்டுகோளில்,

இரு தலைவர்களும் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கை உருவாக்கிப் புரிந்துணர்வை வளர்க்க வேண்டுமென்றும் தற்கால அரசியல் சூழ்நிலைக்குஏற்றவகையில் தங்களை மாற்றி அமைத்து தமிழ் பேசும் இனத்தை வழிநடத்த வேண்டு மென்றும் கேட்கப்பட்டுள்ளது.

(வ)

# ஈரானில் பலியானோர் தொகை 50ஆயிரத்தை தாண்டிவிட்டதா?

## ஊர்ஜிதமற்ற செய்திகள் அதிர்ச்சித் தகவல்

(தெஹரான்)

தெஹரானின் தென்கிழக்கு மாகாணமான கெர்மானில் கடந்த 26ம் திகதி அதிகாலை வேளை இடம்பெற்ற பூகம்பத்தினால் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்ற வரும் வேளையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இன்னமும் சரிவர கணக்கிட்டுக் கொள்ள முடியாத நிலையில், இறந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தை தாண்டிவிட்டதாக சர்வதேச ஊடகங்கள் சில கணக்கிட்டுள்ளன.

கெர்மானில் ஏற்பட்ட பூகம்பத்தினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 70 ஆயிரத்தைத் தாண்டிவிட்டதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை 50ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாக அமெரிக்க செய்திஸ்தாபனங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நேற்றுவரை அங்கு இடம்பெற்ற மீட்புப் பணிகளின் போது 15ஆயிரம் சடலங்கள் எடுக்கப்பட்டு புதைக்கப்பட்டதை ஈரானிய அதிகாரியொருவர் உறுதி செய்துள்ளார்.

இதேவேளை இறந்தவர்களின் எண்ணிக்கை 20ஆயிரத்தைத் தாண்டிவிடும் வாய்ப்புக்கள் இருப்பதாக ஈரானிய உள்துறை அமைச்சர் அப்துல் வாஹிட் முசாலி கில்லாறி தெரிவித்துள்ளார். இது இவ்வாறிருக்க, புதிதாக மீட்புப் பணிகளைத் தொடர வேண்டிய தேவைப்பாடு இல்லையென ஐ.நா.சபை தெரிவித்துள்ள போதிலும் அது பற்றிய முடிபை ஈரானிய மக்களே எடுக்க வேண்டும் எனவும் ஐ.நா. சபை கூறியுள்ளது. (ந) **(ஏற்கனவே வந்த செய்தி 7ம் பக்கத்தில்)**

**எயிட்ஸ் நோய் உள்ளது என உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர் பாலியல் உறவை, இரத்ததானம் செய்வதைத் தவிர்த்தல் வேண்டும்.**

## சிறு விளம்பரங்கள்

### கல்வி

English, Maths உட்பட சகல பாடங்களும் ஆண்டு 3,4,5 புலமைப்பரிசு, 6உம் English Medium தரம் 6,7உயர்ந்த பெறுபேறடையக் கற்பிக்கப்படும். தொடர்பு:85,சிவன் கோவிலடி சிவன் கோவில் பின்புறம், திரு நெல்வேலி. (8053)

### ஒளிவிழா

ஆஸ்பத்திரி வீதி, இலங்கைக் கிளையின் ஒளிவிழா நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கிளையின் பிரதான முகாமையாளர் சி.விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (தி-3,7)

### எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு

(கல்வயல்)

தென்மராட்சிப் பகுதி அரசியல் துறையினரால் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இன்று திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று நடாத்தப்படவுள்ளது. (து-36)

### திடீர் மரண விசாரணை அதிகாரியை நியமிக்க கோரிக்கை

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவரை உடனடியாக நியமிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்திடம் அப்பகுதி விவசாய அமைப்புகள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளன.

வடமராட்சி கிழக்குப் பகுதியில திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவர் இல்லாததால் இப்பகுதியில் திடீர் மரணங்கள் இடம்பெறும் பட்சத்தில் இங்கிருந்து வேறு இடங்களுக்கும் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இச் சிரமங்களை நீக்குவதற்கு உடனடியாக வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (த-43)

# அதிகளவு இரசாயனப் பசளைப் பாவனை சூழலை ஆபத்தான நிலைக்கு இட்டுச் செல்லும்

ஒரு குறிபபிட்ட விளைநிலத்திலிருந்து கூடிய பயிர் உற்பத்தியைப் பெறுவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய வெவ்வேறு தொழில்நுட்ப முறைகளுள் பசளைப் பிரயோகமும் ஒன்றாகும். தாவரம் ஆரோக்கியமாக வளர்ந்து தரமுள்ள, கூடிய விளைபொருட்களைத் தருவதற்கு இயற்கைப் பசளையுடன் சிபார்சு செய்யப்பட்ட அளவில் இரசாயனப் பசளையையும் உபயோகித்தல் அவசியமானதாகும்.

ஆரம்ப காலத்தில் விவசாயிகள் கூடியளவில் இயற்கைப் பசளைகளை மட்டுமே பாவித்துப் பயிர் செய்தனர். சனத்தொகை அதிகரிக்கத் தொடங்க உணவுத் தேவையும் அதிகரித்தது. இதனால் பண்டைய விவசாய முறைகளைக் குறைத்து நவீன விவசாயத் தொழில்நுட்டங்களைப் பாவித்து அதிக உற்பத்தியைப் பெறுவதற்கு ஆரம்பித்தனர். இதன் அடிப்படையில் இரசாயனப் பசளைப் பிரயோகமும் நவீன விவசாயத் தொழில்நுட்பங்களில் ஒன்றாகும்.

விவசாயத் திணைக்களம் பயிர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற பிரதான மூலகங்கள் உள்ளடங்கலாக சமச்சீர்ப்பசளைப் பிரயோகத்தின் முக்கியத்துவத்தை முனவைப்பதுடன் வெவ்வேறு பயிர்களுக்குத் தேவையான இந்த இரசாயனப பசளைகளையும், அவைகள் இடப்படவேண்டிய காலங்களையும் சிபார்சு செய்து வந்துள்ளது. தொடர்ந்தும் சிபார்சு செய்து வருகின்றது.

இரசாயனப் பசளையை உபயோகிக்க ஆரம்பித்த விவசாயிகள் குறிப்பிட்ட சிபார்சு செய்யப்பட்ட அளவிற்கு அதிகமாகவும், சமசீரற்ற முறையிலும் அவற்றைப் பாவித்தால் மண்ணும், நீரும், பயிர்களும் பாதிப்படைந்து வந்தன. தொடர்ந்தும் இந்த இரசாயன உரங்களைக் கூடுதலாக உபயோகிப் போமானால் நம் இயற்கை வளங்கள் எல்லாம் பாதிப்படைந்து சூழலில் பாதகமான விளைவுகள் ஏற்படும். கூடுதலான இரசாயன உரங்களின் பாவனை பின்வரும் முறைகளில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

★ பயிருக்கு ஏற்ற சமச்சீரப் பசளைப் பிரயோகம் செய்யாவிடின் குறைவாக உள்ள மூலகம்பயிர்வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உற்பத்தியைக் குறைக்கின்றது.

★ நைதரசன் பசளையை (அமோனியம் சல்பேற் அல்லது யூறியா) கூடுதலாகப் பாவித்தால் பயிர்களின் பதியவளர்ச்சி கூடுதலாக நடைபெறும். அத்துடன் பீடை நோய்களின் தாக்கங்களும் அதிகரிப்பதுடன் உற்பத்தியும் குறைகின்றது.

★ நைதரசன் பசளையை அளவுக்கு அதிகமாகப் பாவிக்கும்போது மேலதிக பசளை நீரில் கரைந்து தரைக்கீழ் நீருடன் கலப்பதனால் குடிநீர் மாசடைகின்றது. நைத்ரேற்றினது நச்சுத்தன்மையால் புற்றுநோய் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

★ அமோனியம் சல்பேற்றைக் கூடுதலாகப் பாவிக்கும்போது நிலம் அமிலத் தன்மையாக மாறுகின்றது.

★நீர்வடிப்புத்தன்மை குறைவாக உள்ள உவர் நிலங்களில் கூடிய இரசாயனப் பசளைகளைப் பாவிக்கும் போது அதன் உவர்த்தன்மை மேலும் அதிகரிக்கின்றது.

★மண்ணை வளமாக வைத்திருக்க உதவி செய்கின்ற, மண்ணில் வாழுகின்ற பக்ரீறியா, பங்கஸ், அல்கா போன்ற நுண்ணங்கிகள் கூடிய இரசாயன பசளைப் பிரயோகத்தால் குறைக்கப்படுகின்றன. சிலவேளைகளில் சாகடிக்கப்படுகின்றன.

★ மண்புழுக்கள் மண்ணை வளமாக்குகின்றன. கூடிய இரசாயன உரப்பாவனையால் இவைகளின் எண்ணிக்கை மிகக்குறைகின்றது.

மேற்குறிப்பிட்ட தாக்கங்களைக் குறைத்துப் பயிர் உற்பத்தியை அதிகரிக்கக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளாவன :-

★ மண்வளத்தைப் பேணிப்பாதுகாத்துத் தொடர்ச்சியாகப் பயிர்களிலிருந்து கூடிய உற்பத்தியைப் பெறுவதற்குக் கூடியளவில் இயற்கைப் பசளைகளான [illegible]கைகள், கூட்டெரு, பசுந்தாட்பசளை போன்றவற்றை மண்ணுடன் சேர்த்தல் வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு 8-10 தொன் (20 வண்டில்) இயற்கைப் பசளையை வருடாவருடம் இடுதல் வேண்டும்.

★ சமச்சீர் இரசாயன உரப் பாவனையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

★ ஒருங்கிணைந்த பசளைப் பிரயோக முகாமைத்துவத்துடன் நீர் முகாமைத்துவத்தையும் கடைப பிடித்தல் வேண்டும்.

மண்வளத்தைப் பேணிப் பாதுகாக் கவல்ல

**இயற்கைப் பசளைகளின் பெறுமானம்**

| பசளை | நைதரசன் N வீதம் (%) | பொஸ்பரஸ் P வீதம் (%) | பொட்டாஸ் K வீதம் (%) |
|---|---|---|---|
| மாட்டெரு | 0.6 | 0.15 | 0.45 |
| ஆட்டெரு | 0.95 | 0.35 | 1.0 |
| கூட்டெரு | 1.5 | 0.17 | 0.8 |
| கோழியெரு | 1.6 | 1.75 | 0.8 |
| சணல் | 0.75 | 0.12 | 0.51 |

# அரச ஊழியரின் சேவை 60 வயது வரை நீடிப்பு

(கொழும்பு)

அரச சேவைகளில் புதிதாக ஆடகளைச் சேர்ப்பதை நிறுத்தி ஏற்கனவே அரச சேவையில் இருக்கும் ஊழியர்களை 60 வயதுவரை சேவையைத் தொடர அனுமதி வழங்குவதற்கு அரச நிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி அரசசேவையில் இருந்து ஓய்வு பெற்ற 55வயதில் திறமை வாய்ந்த 60ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையில் சேவையைத் தொடர அனுமதிக்கப்படுவார்கள்.

இதேவேளை, 1996ஆம் ஆண்டு ஒக்டோபர் 14ஆம் திகதிக்கு முன்னர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு பதவிகளை வழங்கும் போது தகுதிகள் இல்லாமலும் பின்னர் அத் தகுதிகள் பூர்த்தி செய்யபபட்டு இன்னமும் சேவையிலுள்ள ஊழியர்களுக்கு கட்டாய ஓய்வுக்கான வயது மட்டுப்படுத்தப்படாதமை குறித்து அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் எஸ்.சி.மானப்பெரும சுற்றுநிருபம் ஒன்றை அனைத்து மாகாண சபைகளுக்கும் அமைசசுகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார். (த-61,10)





திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா. 14.00

சங்குநாதம்

ஈராளில் இயற்கை அழிவு

அரசியலுக்குள் சிக்கியுள்ள நீதித்துறை

சோமதேரரின் மரணம் தந்த குழப்பம்

வியாசரின் பதில்கள்

கே.வி.குணசேகரம் எழுதும் கல்தூண்கள்...

(தொடர்கதை)

மற்றும் பல அம்சங்களுடன்

வாசிக்கத் தவறாதீர்கள்

சங்குநாதம்

## இன்று ஒரு தகவல்

# அளவு கடந்த அன்பு

“உங்கள் மீது எனக்கு அளவு கடந்த அன்பு” என்று யாராவது கூறினால் அதை அலட்சியமாக நினைத்து விடக்கூடாது. அது கொஞ்சம் பாரதூரமான விடயம். அளவுக்கு மிஞ்சினால் எதுவும் இடைஞ்சல் தானே. அன்பும் அப்படித்தான்.

அன்பு அதிகமாக இருந்தால் அது எப்படிக் கெடுதல் தரும் என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம். தசரதன் கதை தெரியுமா? கைகேயி மீது வைத்த அளவு கடந்த அன்பு ராமனைக் காட்டுக்கு அனுப்பியது.

தசரதன் எப்பேர்ப்பட்ட அரசன். விசுவாமித்திரர் கூறுகிறார். “என்னை மாதிரி முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் ஏதாவது கஷ்டம் வந்தால் முதலில் முருகனிடம் செல்வோம். அதன் பின் பரமசிவனைப் பார்ப்போம். பின்பு திருமாலிடம் செல்வோம். அதன்பின் பிரமன், இந்திரன் முதலியோரைப் போய்ப்பார்ப்போம். இவ்வளவும் முடியாவிட்டால் அயோத்திக்குச் செல்வோம் என்கிறார்.

“உன்னை விட்டால் வேறு கதி உண்டோ” என்று தசரதனைப் பார்த்து விசுவாமித்திரரே கூறுகிறார். அப்பேர்ப்பட்ட அரசனான தசரதன் கைகேயியீன் காலில் வந்து விழுந்தான். உன் பாதங்களைத் தொட்டுக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்... ராமனைக் காட்டுக்கு அனுப்பாதே” என்கின்றான்.

தசரதனது இந்த நிலைக்கு என்ன காரணம்? அவன் கைகேயி மீது வைத்த அளவு கடந்த அன்பு தான் காரணம். இப்போது கூறுங்கள் அன்பாக இருந்தாலும் அது அளவுக்கு மீறினால் தீமை தருமா? தராதா? அதுமட்டுமில்லை அளவு கடந்த அன்பு நீதிக்கும் நியாயத்திற்கும் புறம்பான காரியங்களைச் செய்யவைத்துவிடும்.

தசரதன் மிகச் சிறந்த நீதிமான். தர்மத்திற்கு விரோதமாக ஒரு காரியமும் செய்யாதவன். அப்படிப்பட்டவன் தனது மனைவியைப் பார்த்து என்ன கூறினான் தெரியுமா? “உனக்காக நான் என்ன செய்ய வேண்டும் சொல் செய்கின்றேன். ஒரு குற்றமும் செய்யாத ஒருவனைக் கொல்ல வேண்டுமா? கொல்கிறேன். மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவனை விடுதலை செய்யச் சொல்கிறாயா செய்கின்றேன். எந்தப் பிச்சைக்காரனையாவது கோடீஸ்வரன் ஆக்கவேண்டுமா ஆக்குகிறேன். அல்லது கோடீஸ்வரனை பிச்சைக்காரனாக ஆக்கவேண்டுமா அப்படியே செய்கின்றேன்” என்றார்.

நீதிக்கு விரோதமான இந்தப்பாவங்களைச் செய்வதற்கு இவன் எப்படித் துணிந்தான். மனைவி மீது கொண்ட அளவு கடந்த அன்பு தான் காரணம். திரிசூலம், வஜ்ராயுதம், வாள் போன்றவற்றினால் தாக்கப்பட்டாலும் கூட அவற்றை லட்சியம் செய்யாத ஒருவன் காமதேவனுடைய மலர் அம்புகள் தாக்கினால் அதை அவனால் தாக்குப்பிடிக்க முடிவதில்லை. விழுந்து விடுவான். காமதேவனுக்கு உள்ள மகிமையே அது தான் என்கிறார் துளசிதாசர்.

அதனால் தான் பெரியவர்கள் என்ன கூறுகின்றனர் என்றால் அளவுக்கு மீறி எதையும் செய்யாதே என்கின்றனர். அம்மா, அப்பா, மனைவி, மக்கள் எல்லோர் மீதும் அன்பு அவசியம் தான். ஆனால் அந்த அன்பு அறிவுக்குப் புறம்பாக இருக்கக்கூடாது. அளவுக்கு மீறியும் இருக்கக்கூடாது. அப்போது தான் வாழ்க்கை சுகமாக இருக்கும். இல்லாவிட்டால் அவஸ்தை தான்.

அளவுக்கு மீறிய அன்பு என்பது சரி. அறிவுக்குப் புறம்பான அன்பு என்பது என்ன? ஒரு தாய்க்கு ஜலதோசம் அல்லது ஏதோ ஒரு தொற்றுநோய் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவருக்குத் தனது குழந்தை மீது அளவு கடந்த அன்பு. தனக்கு நோய் உள்ளது. அது அடுத்தவருக்குத் தொற்றக்கூடியது என்று தெரிந்திருந்தும் அன்பைக்காட்டுவதற்காக அந்தக் குழந்தைக்கு முத்தம் கொடுக்கின்றேன் என்று தூக்கி வைத்து முத்தம் கொடுக்க ஆரம்பித்தால் அது சரியா? இது தான் அறிவுக்குப் புறம்பான அன்பு.

அதுபோல் விலங்குகளிடம் அன்பாக இரு என்று கூறுகின்றோம். அதற்காகப் புலிக்கு முத்தம் கொடுக்க முடியுமா? அப்படிக் கொடுத்தால் அது அறிவுக்குப் புறம்பான அன்பு. அதனால் அன்பும் அறிவு பூர்வமாக இருக்க வேண்டும் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தக் காலத்துக் காதலன் தன் காதலியிடம் கூறினான் “இதோ பார் உன்மீது எனக்கு அளவு கடந்த அன்பு. உனக்காக எது வேண்டுமானாலும் செய்வேன். நெருப்பில் நடக்கவேண்டுமா, நீரில் குதிக்க வேண்டுமா, என் உயிரையும் தருகிறேன்” என்றான். “சரி வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இதே இடத்திற்கு வாருங்கள்” என்றாள் அந்தப் பெண்.

“அன்று மழை பெய்யாமல் இருந்தால் வருகின்றேன்” என்றான் அவன்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சையை வட-கிழக்கு மாவட்டங்களில் நடத்துக

## பரீட்சை ஆணையாளருக்கு ஆனந்தசங்கரி கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படவுள்ளதைக் கண்டித்து யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான வீ.ஆனந்தசங்கரி பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில்,

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் கற்பிப்பதற்காக ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 2004ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படவுள்ளதை அறிந்து பெரும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தேன்.

இப்போட்டிப் பரீட்சையானது கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படுவது அநீதியானதும் நேர்மையற்றதும் முறையற்றதுமாகும். இப்பரீட்சைக்குத் தோற்றுபவர்களில் பெரும்பாலானோர் கிராமப் புறத்தைச் சேர்ந்தவர்கள்.இவர்களில் அதிகமானோருக்கு கொழும்பு நகரமே புதியது.

அவர்கள் கொழும்புக்கு வேறொருவரின் உதவியில்லாமல் வரமுடியாததுடன், அங்கு தங்குமிட வசதி தேடுவதும் மிகவும் சிரமமானது மேலும், இங்கிருந்து வரும் அவர்கள் பரீட்சை நடைபெறும் இடங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

எனவே,வடக்கு-கிழக்கில் உள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலும் குறைந்த பட்சம் ஒரு பரீட்சை நிலையத்தையாவது அமைப்பதுடன்,அவசியம் ஏற்படின் மாவட்டங்களின் பரப்பளவு மற்றும் போக்குவரத்து வசதிகளைக் கருத்தில் கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட பரீட்சை நிலையங்களை ஏற்படுத்த வேண்டும்.

இது தொடர்பாக, பரீட்சை ஆணையாளர் நாயகம் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை விரைவில் எடுக்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-18)

## குடாநாட்டில் வீதியின் அருகே இடம்பெறும்

# கட்டட நிர்மாணம் குறித்து விழிப்பாக இருக்குமாறு அறிவுறுத்து

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் பிரதான வீதிகளுக்கு அருகாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியின்றி கட்டடங்கள் மற்றும் ஏனைய நிர்மாண வேலைகளைப் பொது மக்கள் மேற்கொள்வது தொடர்பாக விழிப்புடன் இருக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் எஸ். ஸ்ரீனிவாசன், உளூராட்சி மன்றச் செயலாளர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எல்லைக்குள் அதன் அனுமதி இல்லாமல் அமைக்கப்படும் கட்டடங்களை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே உளூராட்சி மன்றங்கள் இது விடயத்தில் விழிப்பாக இருந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் பொதுவழிச் சட்டத்தின் 32 (1)மற்றும் 32(2)வது சரத்துக்களின் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் உள்ள “**A** தரத்திலான 11 வீடுகளில் வீதியின் மத்தியில் இருந்து 15 மீற்றர் (50அடி) தூரத்திலும், **B** தரத்திலான 32 வீதிகளில் வீதியின் மத்தியில் இருந்து 12 மீற்றர் (40அடி) தூரத்திலும் கட்டடங்கள் அமைக்கப்படவேண்டும். இவ் அளவுத் திட்டத்தின் பிரகாரம் இனிவரும் காலங்களில் கட்டடங்களின் அமை விடங்கள் நிர்மாணிக்கபபட வேண்டும். அவ்வாறு இல்லாமல் அமைக்கப்படும் கட்டடங்கள் தொடர்பாக இனிமேல் கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன. இது குறித்து உளூராட்சி மன்றங்கள் விழிப்புடன் செயற்படுமாறு அக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (த-252)

## இராசிபலன்

**29. 12. 2003**

**(மார்கழி 14, திங்கட்கிழமை)**

| | |
|---|---|
| ஷட்டி | 08.03 மணி வரை |
| பூரட்டாதி | மு.இ 11.40 மணிவரை |
| இராகுகாலம் | 07.58-09.28 வரை |
| சுபநேரம் | 12.28-01.58வரை |

**மேடம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய நன்மை, உற்சாகம், ஆரோக்கியம்.

**இடபம்**
நல்ல செய்தி, அதிக பிரயாசை, நல்ல வரவேற்பு, காரிய அனுகூலம்.

**மிதுனம்**
பித்தரோகம், பிரயாணம், மனச்சோர்வு, முயற்சி தாமதம்.

**கடகம்**
கௌரவக்குறைவு, வாக்கு மேன்மை, கலகம், காரிய தாமதம்.

**சிங்கம**
நண்பர்கள் சந்திப்பு, தொழில் லாபம், தேசநலன், முயற்சி பலிதம்.

**கன்னி**
தொழில் முயற்சி, மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை.

**துலாம்**
வியாபார நன்மை, தனலாபம், முயற்சி தாமதம், மனச்சஞ்சலம்.

**விருச்சிகம்**
வஞ்சகம், ரோகபயம், தனவிரயம், காரிய தாமதம்.

**தனுசு**
பிரயாணநன்மை, தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழிலில் நன்மை, கற்பனை மிகுதி.

**மகரம்**
வீண்அலைச்சல், நண்பர்கள் விரோதம், முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை.

**கும்பம்**
சயனசுகம், உற்சாகம், எடுத்தகாரியம் கைகூடும், தொழில் லாபம்.

**மீனம்**
புதிய திருப்பம், மனக்கிலேசம், பிரயாணம், காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

\- வளவன்.

## லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின்

# பணிப்பாளரை ஆஜராக உத்தரவு

(கொழும்பு)

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பியசேனரணதுங்க ஜனவரி மாதம் 9ஆம் திகதி பாராளுமன்ற சிறப்புரிமை ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராக வேண்டும் என அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கியதேசிய முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் பாலித்தரங்க பண்டார, தமக்கு எதிராக இடம்பெற்ற லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணையின் பின்னர் அது பற்றி தாம் பாராளுமன்றத்தில்,ஆணைக்குழுவை விமர்சித்து உரையாற்றியதனால் தமக்கு எதிராக மீண்டும் லஞ்ச விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் இதனால் தமது பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவிடம் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து சபாநாயகர்,இம்முறைப்பாட்டை பாராளுமன்ற சிறப்புரிமைக் குழுவிடம் சமர்ப்பித்தார்.

முறைப்பாட்டை ஆராய்ந்த பாராளுமன்ற சிறப்புரிமைக்குழு, ஜனவரி மாதம் 9ஆம்திகதி பணிப்பாளர் நாயகத்தை தம்முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பு விடுத்துள்ளது. (த-60,10)

## பராமரிக்காத காரணத்தால்

# 300 யானைகள் இறப்பு

(கொழும்பு)

காட்டுயானைகளை பிடிப்பதற்கும் பழக்குவதற்கும் அனுமதிக்காத காரணத்தால் வருடந்தோறும் பழக்கப்பட்ட யானைகள் அழிந்து கொண்டிருக்கின்றன. இதேவேளை,யானைகளை காடுகளில் பராமரிக்காத காரணத்தினால்300ற்கும் மேற்பட்ட காட்டு யானைகள் இறந்துவிட்டன. இத்தகவலை யானைகளை பயிற்றுவிக்கும் சங்கத்தலைவர் ராஜா சேனனாயக்கா தெரிவித்தார்.

மேலும் அவர்,காட்டு யானைகளைப் பயிற்றுவிக்க அரசாங்கம் அனுமதி வழங்காவிடின் எதிர்காலத்தில் பெரகரா போன்ற தேவைகளுக்கென எந்தவொரு பயிற்றப்பட்ட யானையும் பெறமுடியாததாகிவிடும் தற்போது நாட்டில் 70 பழக்கப்பட்ட யானைகள் மட்டுமே உள்ளன. வருடமொன்றிற்கு 25 யானைகளையாவது பிடிக்க அரசாங்கம் அனுமதி வழங்கவேண்டும் என கேட்டுக்கொண்டார். (த-6)

## அரசாங்கம் அக்கறையின்றி இருக்கின்றது

# சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்ல ஜனாதிபதி சந்திரிகா முன்வர வேண்டும்

## லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் வேண்டுகோள்

(கொழும்பு)

**சமாதான முயற்சிகளை தாமதமின்றி முன்னெடுத்துச் செல்ல ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்வரவேண்டும் என லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் பட்டிவீரக்கோன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றைவிடுத்துள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் விடயத்தில் எவ்வித அக்கறையும் காட்டாதிருக்கின்றது.

இந்நிலையில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல ஜனாதிபதியே முன்வரவேண்டும் அதற்கான அதிகாரம் அவருக்கு இருக்கின்றது.

அவ்வாறு ஜனாதிபதியால் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் பட்சத்தில், அதற்கான பூரண ஆதரவை அரசாங்கம் வழங்கும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது.

அத்துடன் ஜனாதிபதியின் சமாதான நடவடிக்கைகளுக்கு சர்வதேச நாடுகள் பூரண ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக உறுதியளித்திருக்கின்றன.

இவை தவிர, சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதி ஆரம்பித்தால் தாம் அவருடன் பேசத்தயாராக இருப்பதாக தமிழீழவிடுதலைப்புலிகள் பலமுறை அறிவித்திருக்கின்றார்கள்.

எனவே ஜனாதிபதி மக்களின் ஆசியுடன் சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் அதற்கான ஒத்துழைப்பையும் அழுத்தங்களையும் சகல அரசியல் கட்சிகளும் வழங்க வேண்டும்.

இதேவேளை, நாட்டில் தற்போது நிலவிவரும் மௌன கலாசார நிலை நல்லதாகத் தென்படவில்லை.

இந்த மௌனம் அரசாங்கம் ஒன்று பதவியில் இருக்கின்றதா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

அதுமட்டுமன்றி அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள் என்பன தமது கடமைகளை சரிவரச் செய்வதாகத் தெரியவில்லை என்றும் அந்த அறிக்கையில் பட்டிவீரக்கோன் குற்றம் சாட்டியுள்ளார். (த-60,10)

## தர்மபுர ஆதீன சுவாமிகள் 2ம் திகதி யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரனின் அழைப்பை ஏற்று தமிழ் நாட்டிலுள்ள தர்மபுர ஆதீனம் டாக்டர் ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரான் சுவாமிகள் எதிர்வரும 2ம திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இலங்கை வந்தவர் இவர், எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார். இங்கு 6 நாட்கள் தங்கியிருக்கும் அவர், நல்லூர், கீரிமலை, காரைநகர் ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களைத் தரிசிக்கவுள்ளதுடன மேலும் பல பிரதான தலங்களுக்குச் சென்றுபக்தர்களுக்கு அருளுரைகளையும் வழங்கவுள்ளார்.

இதேவேளை, இன்று திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு வவுனியா அகிலாண்டேஸ்வரி தேவஸ்தானத்திலும், நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திலும், மாலை 5.00 மணிக்கு கண்டி கட்டுக்கலை பிள்ளையார் ஆலயத்திலும், நாளை மறுநாள் மாலை 6.00மணிக்கு பண்டாரவளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திலும் சுவாமிகள் அருளுரை வழங்கவுள்ளார்.

அத்துடன், யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் அவர் எதிர்வரும் 9ஆம் திகதி திருகோணமலைக்கும், 10ஆம் திகதி மட்டக்களப்பு, காரைதீவு ஆகிய இடங்களுக்கும் செல்லவுள்ளமை குறிப்பிடததக்கது. (த-18)



**தேசிய இளைஞர் சேவைகள் மன்னறத்தினால் நடாத்தப்பட்ட புதிய நிர்மாணிப்பு நடனப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட பருத்தித்துறை கே. பாஸ்கரன் குழுவினரைப் படத்தில் காணலாம்.**



**இலங்கை மின்சார சபையின் யாழ். மாவட்டப் பொறியியலாளராக 14 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெற்ற சி. வல்லிபுரத்தை கௌரவித்து அண்மையில் பருத்தித்துறை அலுவலகத்தில் இடம்பெற்ற சேவை நலன் பாராட்டுவிழாவில் மின் அத்தியட்சர் எஸ். செல்வச்சந்திரன் அவரை வரவேற்று உபசரிப்பதைப் படத்தில் காணலாம். (படங்கள்: பரு. நிருபர்)**

## முஸ்லிம் தரப்பு யோசனை பற்றி ஆராய ஹக்கீம் இந்தியாவுக்கு திடீர் விஜயம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் கப்பல் துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான ரவூப் ஹக்கீம்,நேற்று முன்தினம் இந்தியாவிற்கு அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக சபை குறித்த விடுதலைப் புலிகளின் யோசனைகளுக்கு மாற்று யோசனைகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் அமைப்பு விவகாரக் குழுவினர் மும்முரமாகத் தயாரித்துவரும் நிலையில் இந்திய சென்றுள்ள அமைச்சர் ஹக்கீம் இது குறித்து அங்குள்ள முக்கிய அரசியல் வாதிகளுடன் கலந்துரையாடி விட்டு நாளை செவ்வாய்கிழமை மீண்டும் நாடு திரும்புவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபை குறித்த யோசனைகளுக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாற்று யோசனைகள் இம்மாத இறுதிக்குள் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கட்சியின் வட்டாரங்கள் அறிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த-61,10)

## பேரின வாத அரசு வடக்கு - கிழக்கை திட்டமிட்ட முறையில் புறக்கணிக்கிறது

### துணைப்பொறுப்பாளர் செம்மணன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

பேரினவாத அரசு திட்டமிட்ட முறையில் வடக்கு-கிழக்கினைப் புறக் கணித்து வருகின்றது. சமாதானம் இன்று தலைகீழாக மாறியுள்ளது.ஆயினும் நாம் எமது சமாதான முன்னெடுப்பில் பற்றுறுதியுடன் இருக்கின்றோம்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற தென்மராட்சி அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்பட்ட கூட்டத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

2000ஆம் ஆண்டு யுத்தம் காரணமாகவும் அதற்கு முன்னர் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாகவும் தென்மராட்சி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. புறக்கணிப்புக்கள்யாவும் வரலாற்றின் தொடர்ச்சியாகவே இடம பெற்று வருகின்றன.

எம்மைப் பொறுத்தமட்டில் நாம் போதிய விட்டுக்கொடுப்புக்களைக் காட்டிவருகின்றோம். மக்களின் உரிமைகள் கிடைக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியகவுள்ளோம். நாம் நிரந்தரமான சமாதானத்தை எமது மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதில் மிகவும் ஆர்வத்துடன் இருந்து வருகின்றோம். யாழ். மாவட்டத்திற்கு வரும் நிதியில் கூடியளவு நிதியினை அரச அதிகாரிகள் தென்மராட்சி பிரதேசத்திற்கு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் கல்வி, சுகாதாரம் மின்சாரம், புனரமைப்பு,வீதி அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி, தொழில் பிரச்சினை, நகர அபிவிருத்தி, குடிநீர் போன்ற விடயங்களில் பொது மக்கள் தமது தேவைகளை முன்வைத்து உரையாற்றினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் அங்கு உரையாற்றும் போது,

எமது உரிமைகளைப் பெறுவதற்காக நாம் தனித்துவமாக நின்று போராடவேண்டியுள்ளது. எமது பகுதிக்கான உதவிகளை நாம் சிங்கள அரசுடன் முட்டி மோதித்தான் பெறவேண்டிய நிலையுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவு விரைவில் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படவுள்ளது. இது தொடர்பாக நாம் உரிய அமைசசுடன் போராடி வருகின்றோம்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பல புனரமைப்புப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. ஆயினும்கூட சில சிரமங்கள், சிக்கல்கள் தோன்றியுள்ளன என்றார். (த-16)

## உலக வங்கியின் ஏகாதிபத்தியத்தால் நாடு கைப்பாவையாக மாறிவருகிறது

### சமசமாஜக் கட்சியின் அரசியல் குழு எச்சரிக்கை

(கொழும்பு)

உலகவங்கி மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் கைப்பாவையாக எமது நாடு மாறிவருவதை அவதானிக்கும் போது நாம் பெற்ற அரசியல் சுதந்திரம் பறிபோய் விடுமோ என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது என லங்கா சமசமாஜக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் டாக்டர் திஸ்ஸவிதான தெரிவித்துள்ளார்.

அண்மையில் ருவான் வெலவில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து எமது நாடு அரசியல் மற்றும் பொருளாதார சுதந்திரங்கள் வேண்டும் எனப் போராடி அவற்றிருந்து விடுதலையும் பெற்றுக் கொண்டது.

ஆயினும் பின்னர் இடம்பெற்ற இனப் பிரச்சினைகள் காரணமாக அழிவடைந்துள்ள நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக சர்வதேச நாடுகளின் உதவியை எமது நாடு எதிர்பார்த்து நிற்கிறது.

இந்நிலையில், நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்காக உலக வங்கி அமெரிக்கா உட்பட பல நாடுகள் உதவிகளை வழங்கிவருகின்றன. இந்நிலை நீடிக்குமானால் முன்னர் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபட்ட நாடு மீண்டும் உலக வங்கி மற்றும் அமெரிக்கா ஆகியவற்றின் பிடிக்குள் அகப்பட்டு எமது அரசியல் சுதந்திரம் பறிபோய் விடக்கூடிய நிலை ஏற்படவுள்ளது எனவும் குறிப்பிடடுள்ளார். (த-18)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)


மோட்டார் சைக்கிளும் சைககிளுமெ மோதுண்டு விபத்துக்குள்ளானதில் அவற்றில் பயணம் செய்த இரு வரும் படுகாயமடைந்துள்ளனர்.

நேறறு முன்தினம் யாழ்ப்பாணம் ஒஸ்கார் வீதியில் இடம்பெற்ற இவ் விபத்தில் யேசுதாசன் (வயது21), ஞானராசா மெரின்ஸ் (வயது20) ஆகிய இரு வரும் காயமடைந்துள்ளனர். (த-3)

# ஈரான் பூகம்பத்தின் சோகக் காட்சிகள்




















## முன்பள்ளி அமைப்பு

(வடலியடைப்பு)

நிக்கொட் நிறுவனத்தின் உதவியுடன் காரைநகரில் மலசலகூடம், முன்பள்ளி மற்றும் பொதுநோக்கு மண்டபம் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய காரைநகர் தோப்புக்காட்டில் 30 மலசலகூடங்களும், பாலாவோடைப் பகுதியில் முன்பள்ளிப் பொதுநோக்கு மண்டபம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன.

இவை அடுத்தமாதம் முதல் இந்து கலாசார அமைச்சினால் பொதுமக்கள் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளன. (த-21)

## தாச்சிச் சங்கப் பொதுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

யாழ். மாவட்டத் தாச்சிச்சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஜனவரிமாதம் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்குக் கோண்டாவில் ஸ்ரீ நாராயணர் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத் தாச்சிச்சங்கத்தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறவுள்ளது. (த-75)

## அரச அதிபரிடம் கோரிக்கை

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் செயற்பாடுகளைத் திறம்பட மேற்கொள்ளுவதற்கு ஏற்றவகையில் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனிடம் வடமராட்சி கிழக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் செயற்பாடுகளைத் திறம்படச் செய்வதற்கு ஒவ்வொரு கிராமிய அபிவிருத்திச் சங்கத்திற்கும் தனியான கட்டடம் ஒன்று அமைக்கப்படவேண்டும்.

அத்துடன், வடமராட்சி கிழக்கில் உள்ள மயானங்கள் மற்றும் சேமக்காலை ஆகியவற்றிற்கு புதியவீதி, மடங்கள், கிணறு ஆகியன அமைக்கப்பட வேண்டும்.

இது விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அரச அதிபரிடம் கேட்கப்பட்டுள்ளது.

(த-43)

## விழிப்புக்குழு அமைப்பு

(பன்னாலை)

பன்னாலை வரத்தலக் கற்பக விநாயகர் ஆலயத்தில் விழிப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தில் தொடர்ச்சியாக விக்கிரகங்கள் மற்றும் ஆலய வாகனங்கள் போன்றன களவுபோனதை அடுத்தே, இவ் விழிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-32)

## 6 மாணவர்களுக்கு அதிகூடிய புள்ளி

(கந்தரோடை)

இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் உள்ள தரம்-5 மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சையில் வலிகாமம் கல்வி வலயத்தில் 6 மாணவர்கள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பரிசில் பெறத் தகுதிபெற்றுள்ளனர்.

அம்மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

ம. துவாரகன் - உடுவில் மகளிர் கல்லூரி.

எஸ்.அன்றுஷா - உடுவில் மகளிர் கல்லூரி.

வி.ரேவர்சி - வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.

இ.பகீசன் - உடுவில் மகளிர் கல்லூரி.

க.பிரசாந்தன் - மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை.

எஸ்.நிரோஜன் - நவாலி சென். பீற்றர் றோ.க.த.க. பாடசாலை.

# காணாமல் போனோர் விடயம் சம்பந்தமான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள்

**யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட விசாரணைகள் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டு வருகன்றன. எனவே இது சம்பந்தமான உண்மை நிலையை விளக்கும் விதமாக விசாரணைக் குழுவின் தலைவர் கலாநிதி தேவநேசன் நேசையா எழுதிய இக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

யாழ்ப்பாணத்தில் 1990 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் காணாமல் போனார் சம்பந்தமான விசாரணைகளை செய்வதற்கென மனித உரிமைகள் ஆணைக்குழுவினால நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு வின் செயற்பாடுகள் பற்றி பத்திரிகைகளில் அண்மைக் காலத்தில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவ் விசாரணைக்குழுவின் தலைவராக செயற்பட்டவர் என்ற ரீதியில் உண்மை நிலையை வாசகர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

### ஆணைக்குழுவிற்கு உள்ள அதிகாரங்கள்

மனித உரிமைகள் ஆணைக்குழு, உரிமை மீறல் சம்பந்தமாக கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிபதற்கான அதிகாரங்களைக் கொண்டதொரு அமைப்பாகும். சில சந்தர்ப்பங்களில், சம்பந்தப்பட்ட உரிமை மீறல்கள் தொடர்பாக பாதிப்புற்றவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தியவருக்குமிடையில நடுவராக செயற்பட்டு ஒரு இணக்கத்தை ஏற்படுத்தும் அதிகாரமும் அதற்கு உண்டு. காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்வதற்கென மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவிற்கு அளிக்கப்பட்ட அதிகார பத்திரத்திற்கமைவாகவே அது செயற்படவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி இருந்துள்ளது. குறித்த அதிகார பத்திரத்தின் படி, 1990 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் காணாமல் போனோர் சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குச் செய்யப்பட்டிருந்த முறைப்பாடுகளை விசாரித்து, அவ்வகையில் காணாமல் போனதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகள் பற்றியும், குறித்த நபர்கள் தற்பொழுது எங்கு இருக்கின்றார்கள் என்பது பற்றியும் முன் வைக்கப்பட்ட சாட்சியங்களுக்கு அமைய. அவ் வகையான காணாமல் போனமைக்குப் பொறுப்பானவர்கள் யாவரெனவும் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதுடன் பாதிப்புற்றோர் குடும்பங்களுக்கு எவ் வகையான நிவாரணம் அளிக்கப்படவேண்டும் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டியிருந்தது. காணாமல் போவதற்குப் பொறுப்பாக இருந்தவர்களுக்குத் தண்டனை கொடுக்கவோ அல்லது அவர்களை நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்வதற்கான அதிகாரமோ விசாரணைக் குழுவிற்கோ, மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கோ இல்லை.

### அறிக்கை சமர்ப்பிப்பு

விசாரணையின் போது தெரிய வந்த விடயஙகளை அறிக்கையில் ஆதாரபூர்வமாக எடுத்துரைத்து உண்மையில் நடந்தது என்ன என்பதை முறைப்பாட்டுக்காரருக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அரசாங்கத்திற்கும், முழு உலகிற்கும் எடுத்துக் கூறும் பொறுப்பை நிறைவேற்றும் முகமாக ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட இவ் அறிக்கை தேசிய, பலதேசிய மனித உரிமைகள் ஆர்வலர்கள், பாதுகாப்புப்படையின் முப்பிரிவின் பிரதிநிதிகள் முன்னிலையில் பகிரங்கமாக சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த வைபவத்தில் சுமார் 300 பக்கங்களைக்கொண்ட இவ் அறிக்கையின் முக்கிய விடயங்களைக் கொண்ட சாராம்சமானது,

வைபவத்திற்கு சமுகமாயிருந்தவர்களுக்கு வாசித்து விளக்கப்பட்டு அது சம்பந்தமான கருத்துப் பரிமாற்றங்களும் நடைபெற்றன. அதன் பிரதிகள் அனைவருக்கும் வழங்கப்பட்டன. அன்று சமுகமாயிருநத இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல பலகல்ல அங்கு கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவ் வேளையிலேயே பதிலளித்தமை குறிப்பிடத்தக்க ஒருவிடயமாகும். விசாரணைகளின்பொழுது முன் வைக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில், காணாமல் போனவர்களைக் கைது செய்தவர்கள் என சாட்சிகள் குறிப்பிட்ட 35 இராணுவத்தினரின் பெயர்கள் கொண்ட பட்டியல் இராணுவத்தினர்க்கு சமர்ப்பித்து அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு விலாசங்கள் கேட்கப்பட்ட பொழுது சம்பந்தப்பட்டவர்களின் முழுப் பெயர்களும், தற்போதைய தரம் பற்றிய விபரங்களும் இன்றி, அவர்களை தேடிக் கொள்ள முடியாது என இராணுவத் தளபதியினால் எமக்கு அனுப்பப்பட்ட கடிதம் கூட குறித்த அறிக்கையில் சேர்ககப்பட்டுள்ளது. அத்துடன இவர்களைத் தேட முடியாது எனக் கூறியமைக்கு இராணுவத் தலைமையகத்தின் செயறதிறனின்மை அல்லது சம்பந்தப்பட்டவர்கள் எம் முன் சாட்சியமளிக்க உதவினால் மறைக்கப்பட வேண்டிய விபரஙகள் எமக்கு தெரியவந்துவிடும் என்ற அச்சத்தினால் இருக் கும் என அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுளளது.

### தமிழில் பெறுபேறுகள்

எமது அலுவலர்களின் முயற்சியினால் குறித்த காலத்தில் நாவறகுழி முகாமிற்குப் பொறுப்பாக இருந்த கேணல் துமிந்த கெப்பற்றிவலான, யாழ். இராணுவப் பிரிவுத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தன என்பவர்களுடைய தற்போதைய விலாசங்கள் கண்டுபிடிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போது வெளிவந்த விபரங்கள் பல அறிக்கையில் சேர்க்கப்பட்டள்ளன.

அத்துடன் நின்றுவிடாது, விசாரணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்த 281 முறைப்பாட்டுக்காரர்களுககும் தனித்தனியே அவர்களின் முறைப்பாடு சம்பந்மான விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களையும் விசாரணையின் பெறுபேறுகளையும் தமிழிலே அனுப்பிவைத்துள்ளோம்.

மேலும் விசாரணையின் பொழுது காணாமல் போயுள்ள குறித்த நபர்களின் குடும்பங்களுக்கு அளிக்கப்படவேண்டிய நிவாரணங்கள் எவ் வகைப் பட்டதாக இருக்கவேண்டும் எனறும் விரிவாக இவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளதுடன் மட்டுமல்லாமல, அவர்களில் மிகவும் பாதிப்புற்ற நிலையில் இருக்கும் சுமார் 142 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு துரிதமாக அவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கும்படி அவர்களைப் பற்றிய சகல விபரங்களும் பல அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க, காணாமல் போனோர் சம்பந்தமான விசாரணைக்குழு தமது பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றவில்லை என்று எவரேனும் கூறுவதை நியாயமாக கருதமுடியாது. ஆங்கிலத்தில் எழுதி வெளியிடட இவ்வறிக்கை தமிழில் மொழி பெயர்க்கப்படும் வரை காத்திருந்தால் இவ்விசாரணைக்குழுவின் அறிக்கையை சமர்ப்பிக்கப் பல மாதங்கள் எடுத்திருக்கும். ஆகவேதான் சகலரும் அறிந்து கொள்ளக் கூடியதாக ஆங்கில அறிக்கையைத் தாமதமின்றி வெளியிட்ட பின் அதனை தமிழில் மொழிபெயர்க்கும் நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் இவ்வறிக்கை புத்தக வடிவில் வெளியிடப்படும்.

இவ் விடயங்களிலிருந்து விசாரணைக்குழு தனது பொறுப்புக்கள்ள எவ் வகையில் நிறைவேற்றியுள்ளது. என்பது வாசகர்களுக்குத் தெரியவரும் என நினைக்கின்றேன். □


# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்பப் பயிற்சிநெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

**ஆரம்பம் : 05-01-2004**

| | | |
|---|---|---|
| 1.A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING | DURATION | 1 YEAR |
| B. DIPLOMA IN MICRO SOFT OFFICE | DURATION | 6 MONTHS |
| C. DIPLOMA IN TYPE SETTING | DURATION | 3 MONTHS |
| D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING | DURATION | 4 MONTHS |
| E. DIPLOMA IN DESK - TOP PUBLISHING | DURATION | 6 MONTHS |
| F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L | DURATION | 3 MONTHS |
| G. DIPLOMA IN HARDWARE ENGINEERING | DURATION | 1 YEAR |

2. CERTIFICATE COURSES: ... x) COREL DRAW



## அரசாங்க அதிபரின்

# அறிவித்தல்

## தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் கட்டப்பட்ட வீடுகளின் குடியிருப்பாளர்களுக்கான அறிவித்தல்

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டு, கையளிக்கப்பட்ட, கையளிக்கப்படாத வீடுகள் யாவும் 07.10.2003ஆம் திகதியில் இருந்து பிரதம மந்திரியின் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத் தீர்மானத்திற்கு இணங்க அரசாங்க அதிபருக்கு கையளிக்கப்பட்டுள்

| | |
|---|---|
| D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING | DURATION 4 MONTHS |
| E. DIPLOMA IN DESK - TOP PUBLISHING | DURATION 6 MONTHS |
| F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L | DURATION 3 MONTHS |
| G. DIPLOMA IN HARDWARE ENGINEERING | DURATION 1 YEAR |

**2. CERTIFICATE COURSES:-**

i) MS WORD - 2000
ii) MS EXCEL - 2000
iii) MS ACCESS - 2000
iv) MS POWER POINT
v) VISUAL BASIC VER 6.5
vi) PASCAL
vii) d BASE iii+
viii) PAGE MAKER
ix) WINDOWS 95
x) COREL DRAW
xi) d BASE FOR WINDOW
xii) PRINT SHOP DELUXE
xiii) ADOBE PHOTO SHOP
xiv) QUICK BOOK

| | |
|---|---|
| 1) சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்) | காலம் 6 மாதங்கள் |
| 2) சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| 3) மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol or Diesel வாகனங்கள்) | காலம் 6 மாதங்கள் |
| 4) ஜெனரல் எலக்ரிஷன் (மின்சார இணைப்பு மோட்டார் றிவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| 5) வானொலி, தொலைக்காட்சிப்பெட்டி திருத்துதல் | காலம் 8 மாதங்கள் |
| 6) கடைச்சல் இயந்திரத் தொழிற் பயிற்சி | காலம் 3 மாதங்கள் |
| 7) மின் ஒட்டுநர் பயிற்சி | காலம் 3 மாதங்கள் |
| 8) மரவேலை (With use of Machinery) | காலம் 6 மாதங்கள் |
| 9) குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |

எமது நிறுவனத்தில் கணனிகள் சம்பந்தமான சகல திருத்தவேலைகளும், வானொலி, தொலைக் காட்சிப் பெட்டிகளில் ஏற்படும் எல்லாவித பழுதுகளும் திருத்தம் செய்து கொடுக்கப்படும்.

NOTE : 1. பயிற்சிக்கட்டணங்களை தவணைமுறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி பங்குக் குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.
4. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலகநேரத்தில்பெற்றுக்கொள்ளலாம்.

PRODUCITION AND REPAIRING ON ORDER ...! கட்டமைத்தலும், திருத்துதலும்.
சகல விதமான இரும்பு சார் உற்பத்திப் பொருட்கள் ஒட்டுவேலைகளும் மரத் தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவு மூலம் ஓடருக்கு மிகவிரைவாகவும் திறமையாகவும் செய்து கொடுக்கப்படும்.

**வாகனத் தகுதிச் சான்றிதழ் - 2004 FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE**
2004 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தினால் தைமாதம் வழங்கப்படும் என்பதனை சகல வாகன உரிமையாளருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் மோட்டார் சைக்கிளுக்கான Engine No. பொறித்துக்கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:
T.P.NO - 222 6148

(C/7013)

*REGISTRAR,*
*PATRICIAN INSTITUTE,*
*59, ST.PATRICK'S ROAD, JAFFNA.*

களின் கீழ் கட்டப்பட்டு, கையளிக்கப்பட்ட, கையளிக்கப்படாத வீடுகள் யாவும் 07.10.2003ஆம் திகதியில் இருந்து பிரதம மந்திரியின் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத் தீர்மானத் திற்கு இணங்க அரசாங்க அதிபருக்கு கையளிக்கப்பட்டுள் ளன. இவ்வீடுகளை இவ் அறிவித்தல் கிடைத்து மூன்று மாத காலங்களுக்குள் அதாவது 31.03.2004ற்கு முன்னர் இவ் வீட்டிற்குக் குடியிருக்க உரிமையளிக்கப்பட்டவர்கள் அதாவது தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டவர்கள் அவ் வீடுகளுக்குச் சென்று குடியேறும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின் றார்கள். இவ்வாறு குடியேறுவதற்கு அவ்வீடுகள் யுத்தத்தி னால் அழிக்கப்பட்டு, சிதைவடைந்து குடியிருப்பதற்கு தகுதி யற்றதாக இருப்பது என மேலே கூறப்பட்டவர்கள் கருதினால் அது தொடர்பான விபரங்களை இக்கால இடைவெளிக்குள் வீடமைப்புத் திட்டம் அமைந்துள்ள இடம், இவ்வீடமைப்புத் திட்டத்தின் தன்மை, முழுப்பெயர், ஒதுக்கப்பட்ட வீட்டு இலக்கம், குடியிருக்க முடியாமைக்கான காரணம் என்பனவற்றை விளக்கமாகக் குறிப்பிட்டு எனக்கு எழுத்துமூலம் அறிவிக்கவேண்டும். இவ்வாறு குடியிருக்கப்படாத, குடியிருக்காமைக்கான காரணத்தைத் தெரிவிக்கப்படாத வீடுகள் என்னால் முழுமையாகக் கையேற்கப்பட்டு, குடியிருப்பதற்கு வீடுகள் அற்ற தகுதியான குடும்பங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். இவ்வீடுகளில் வீடமைப்பு அதிகார சபையின் அல்லது எனது அனுமதியின்றி இவ்வீடுகளில் சட்டபூர்வமற்ற முறையில் வதிவார்களாயின் அவர்களை இவ்வீடுகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரி வித்துக்கொள்கின்றேன்.

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்.

(C-7068)

# ஈரானில் நடந்த பூகம்பம் 15 ஆயிரம் சடலங்கள் மீட்பு!

(தெஹ்ரான்)

ஈரானின் தென்கிழக்குப்பகுதியில் உள்ள பாம்நகரைத்தரைமட்டமாக்கிய பூகம்பத்தால் பலியானவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்தைக் கடந்து விட்டதாக வெளிநாடடுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீட்புப்பணியாளர்கள் இதுவரை 150 பேரை உயிருடன் மீட்டுள்ளதாகவும், இடிபாடுகளுள் புதைந்துகடப்பவர்களை மீட்டெடுக்க நவீன இயந்திரங்கள் போதுமான அளவில் இல்லாததால் மீட்புப் பணிகள் தாமதம் அடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பூகம்பத்தில் சிக்கி உருக்குலைந்து போன கெர்மான் மாகாணத்தில் மண்ணோடு மண்ணாகிப்போன கட்டிங்களுக்கிடையே இதுவரை 15 ஆயிரம் உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சடலங்களைத் தனித்தனிக் குவியல்களாக புதைக்கும் பணி ஒருபுறம் நடைபெற்றுவருகிறது.

இடிபாடுகளுக்கிடையே இன்னும் சிக்கியிருப்பவர்களை மீட்கும் பணி மோப்பநாய்களின் உதவியுடன் நடைபெற்றுவருவதாக ஈரான் அதிகாரிகள் கூறுகின்றனர். (ந)

# இந்தியாவுடன் பேச்சு நடத்த "உல்பா" அமைப்பு நிபந்தனை

(திம்பு)

இந்திய அரசுடன் நிபந்தனையோடு கூடிய வகையில் பேச்சு வார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக "உல்பா" தீவிரவாத அமைப்பு அறிவித்திருக்கின்றது.

இந்தியாவின் எல்லைப் பகுதியில் இருந்து உல்பா தீவிரவாதிகளை வெளியேற்றும் முகமாக பூட்டான் படையினர் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்திவரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

தமது நிபந்தனைகளை ஏறக இந்தியா தயாராக இருந்தால் பேச்சு வார்த்தை நடத்தத் தாம் தயாராக இருப்பதாக "உல்பா" அமைப்பு கூறியிருக்கிறது.

இந்திய மாநிலமான அஸாமை தனிநாடாகப் பிரகடனம் செய்ய வேண்டும் எனக்கோரி "உல்பா" தீவிரவாத அமைப்பு 1979ஆம் ஆண்டில் இருந்து போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-9)



ஈராக்கை விட்டு அமெரிக்கப் படைகளை வெளியேறக் கோரி சென்னை அரசு பொது மருத்துவமனை எதிரே உள்ள மெமோரியல் ஹோல் அருகே தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தினர் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# ஈரானின் புனரமைப்புக்கு இந்தியா உதவத் தயார்

## அத்வானி தெரிவிப்பு

(புதுடில்லி)

ஈரானின புனரமைப்பு புனர்நிர்மாணப்பணிகளுக்கு உதவத் தயாராக இருப்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி, இந்தியாவின் உதவி ஈரானுக்கு எப்பொழுது தேவைப்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் இந்தியா உதவத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார்.

குஜராத் முதல்வர் நரேந்திர மோடி, இது குறித்து தன்னுடன் தொலை பேசியில் கலந்துரையாடியதாகவும்,

புனரமைப்புக்கும் மற்றும் புனர்நிர்மாணப் பணிகளுக்கும் நிபுணத்துவம் வாய்ந்தவர்களை குஜராத்தில் இருந்து அனுப்பிவைக்கத் தயாராக இருப்பதாக அவர் கூறியதாகவும் அத்வானி தெரிவித்துள்ளார்.

ஈரானின் புனர் நிர்மாணப் பணிகள்குறித்து இந்திய வெளிவிவகாரத்துறை ஒருங்கிணைந்து செயற்படும் எனவும் அத்வானி மேலும் கூறியுள்ளார். (த-9)



ஒரிஸா மாநிலம் பூரி கடற்கரைப் பகுதியில் மணலால் உருவாக்கப்பட்ட ஈராக் அதிபர் சதாம் ஹுசேனின் உருவத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கும் கலைஞர்.

## 2003ஆம் ஆண்டுக்கான

# இந்தியாவின் சிறந்த மனிதராக பிரதமர் வாஜ்பாய் தெரிவு

(புதுடில்லி)

2003 ஆம் ஆண்டுக்கான சிறந்த மனிதராக இந்தியப் பிரதமர் வாஜ்பாயை, ஹிந்துஸ்தான் ரைம்ஸ் நாளிதழ் தேர்ந்தெடுத்துள்ளது.

கடந்த ஓராண்டு முழுவதும்பிரதமர் வாஜ்பாய் என்ற தனிநபரின் செல்வாக்கு மற்றும் தேர்தலை எதிர் நோக்கிய அவரது பார்வை என பல் வேறு திறமைகளுக்காக அவரைச் சிறந்த மனிதராகத் தேர்த்தெடுத்ததாக அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த 3 மாநில சட்டமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சியின் வெற்றி அதற்கு முன்னதாக இடம்பெற்ற குஜராத் தேர்தல் வெற்றி போன்றன பிரதமர்வாஜ்பாயின் செல்வாக்கினை மேலும் அதிகரித்துள்ளது.

அத்துடன், பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தப் பிரதமர் வாஜ்பாய் மேற்கொண்ட முயற்சிகளுக்காகவும் அவர் 2003 ஆம் ஆண்டின் சிறந்த மனிதராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஹிந்துஸ்தான் ரைம்ஸ் நாளிதழ் அறிவித்துள்ளது. (த-9)

## போரினால் செயலிழந்த

# தொலைக்காட்சி சேவையை இஸ்ரேல் மீண்டும் ஆரம்பித்தது!

(ஜெருசலேம்)

இஸ்ரேல் சுமார் ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் தனது தொலைக்காட்சிச் சேவையை ஆரம்பித்துள்ளது.

"இஸ்" எனப் பெயரிடப்பட்டுள்ள இநத செய்மதித் தொலைக்காட்சிச் சேவை நேற்று முன்தினம் ரஷ்யாவின் சைஷரிட்ரச் எனும் மாகாணத்தில் பொருத்தப்பட்ட டிஸ் அன்ரனாக்கள் மூலம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டு இஸ்ரேலில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக மேற்படி தொலைக்காட்சிச் சேவை கைவிடப்பட்டிருந்தது. உள்நாட்டில் தொலைக்காட்சிச் சேவை ஒன்று இல்லாதது பெரும் குறையாகக் கருதப்பட்டது.

இதனை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அமெரிக்காவில் இஸ்மியோ தொலைக்காட்சியுடன் இணைந்து, ரஷ்யாவில் இருந்து ஒளிபரப்பாகும இந்தச் சேவையைக் கங்கேரி, போலந்து, சிலோவாக்கியா றொமேனியா, கிரேக்கம் ஆகிய நாடுகளிலும் கண்டுகளிக்க முடியும் என்று "இஸ்" தொலைக்காட்சி நிலையம் அறிவித்துள்ளது. (த-9)

# கால்நடைகளுக்கு விசர் நோய் பரவ கனடாவே காரணம்

## அமெரிக்கா குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)


காலநடைகளுகளு விசர் நோய் பரவ கனடாவே காரணம் என அமெரிக்காவின் விவசாயத் திணைக்களம் குற்றஞ் சாட்டியுள்ளது.

அமெரிக்காவின் கால்நடை மற்றும் மிருகவைத்தியத்துறை என்பன கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில, உள் உணவுப் பொருட்களைக் கனடாவில் இருந்து அமெரிக்கா இறக்குமதி செய்தபோது பரவிய தொற்று நோயே இந்த விசர்நோய் ஏற்படக் காரணம் எனக்குறிப்பிட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு கனடாவின் தனியார் உற்பத்திகளை அமெரிக்கா இறக்குமதி செய்தபோது, இந்த உற்பதிப் பொருட்களுடன் கொண்டு வரபபட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஒரு வகைக் கிருமியே இந்த நோய் பரவுவதற்குக்காரணம் என்று திட்வடமாக தெரியவந்திருப்பதாக அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கால்நாடை பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்படுத்தும் முகமாக திட்டமிட்டுச் செய்யப்பட்டசதிமுயற்சி இது என்றும் அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

கால்நடை உற்பத்தியின் ஏற்றுமதி பாதிப்படைந்தமையினால் அமெரிக்கா நாளொன்றிற்கு 27 பில்லியன் அமெரிக்க டொலர்களை இழக்க நேரிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த-9)



பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஈரானின் பழமையான நகரம் என்ற வரலாற்றுப் பெருமை கொண்டிருந்த பாம் நகரம், நில நடுக்கத்தால் சுவடு தெரியாமல் தரைமட்டமாகி விட்டது. நில நடுக்கம் ஏற்படுவதற் கு முன்பு அந்த நகரின் அழகிய தோற்றம்.



தற்போது சுவடு தெரியாமல் தரைமட்டமாகிக் காணப்படும் ஈரானின் பாம் நகரத்தின் தோற்றம்.

# சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள்

# ஒன்றுபட்டால் அரசியல் யாப்பை மாற்றலாம்

## கண்டி மல்வத்த பீட மகாநாயக்க தேரர் ஆலோசனை

(கொழும்பு)

**சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று பட்டால் இலங்கையின் அழிவுக்குக் காரணமான அரசியல்யாப்பை மாற்றியமைக்க முடியுமென கண்டி மல்வத்த பீடத்தின் மகாநாயக்கதேரர் நம்புக்வெல ஸ்ரீ விபஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.**

கண்டி பௌத்த சிங்கள சிரேஷ்ட பிரஜைகள் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் கண்டி ஒன்றிணைந்த பௌத்த மண்டலப் பிரதிநிதிகள் ஆகியோர், மல்வத்த பௌத்தபீட மகாநாயக்க தேரரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டபோதே இவ்வாறு அவர் கூறியுள் ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அரசியல்வாதிகள் சிலர் என்னைச் சந்திக்க வருவது எனது ஆலோசனைகளைப் பெறுவதற்கல்ல. மக்களை எனது ஆசியுடன் ஏமாற்றுவதற்கே என னிடம் வருகிறார்கள். இவ்வாறானவர்கள் எனனைச் சந்தித்து விட்டு வாசலைத் தாண்டியதும் எனது ஆலோசனைகளை மறந்து விடுகிறார்கள்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டுமாயின் அரசியல் யாப்பில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அரசியல் யாப்பை அவசியம் மாற்றியமைக்க வேண்டும் எனக் கூறுபவர்கள் பதவிகளில் பதுங்கி இருக்கின்றனர். சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று பட்டால் இந்த அரசியல் யாப்பை மாற்றியமைக்க முடியும். எனினும் அவர்களுக்கு இது விடயத்தில் எவ்வித அக்கறையும் இருப்பதாகத் தெரியவில்லை.

நமது நாடு ஒரு விவசாய நாடு. ஆனால் விவசாயத்துறை முற்றாகச் சீரழிந்துள்ளது. இந்த நாட்டில் வேலைசெய்யக்கூடிய சிங்களவர்கள் இல்லை. எல்லோரும் வெளிநாட்டவர்களிடம் கடன்பெற்று பிச்சைக்காரர்களைப் போன்று உண்டு குடித்துக்கொண்டிருக்கின்றனர்.

இன்றைய கல்வித் திட்டமானது சிறவர்கள் மத்தியில் தேசிய உணர்வை இல்லாமல் செய்து வருகின்றது. இந்த நாட்டில் பிககுகளுக்கு இருந்த கௌரவம் தற்போது காடையர்களுக்கே கிடைத்து வருகிறது..

நம் நாட்டில் சிங்களவர்களுக்கு இழைக்கப்படும் அநிதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களுக்குத் தான் பூரண ஆதரவு வழங்கப் போவதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

(த)

# பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்க

# உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்

## மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் அரச அதிபருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு நிதி உடனடித் தடையாக இருக்கும் பட்சத்தில், அவர்களது நஷ்டஈட்டுக்கான உறுதிப்பத்திரங்களை வழங்க முன்வர வேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியான நிவாரணம் வழங்கும் வகையில் வங்கிகள் மூலம் வட்டியில்லாத கடன்களை வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான துரித அபிவிருத்தி தொடர்பாக யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தினால் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனிடம் கையளிக்கப்பட்ட விரிவான மகஜரில் கூறப்பட்டுள்ளது.

ஒன்றியத்தின் தலைவரான சு.பரமநாதனினால் நேரில் கையளிக்கப்பட்ட இம் மகஜரில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது:-

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசின் ஒன்றிணைக்கப்பட்ட உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவியானது அவர்களது இல்லிடங்களை அமைப்பதற்கும் வாழ்வியல் தேவைகளை மேம்படுத்துவதற்கும் என கருதப்படுகின்றது. ஆயினும் அத்தொகை மிகவும் குறைந்ததாக இருப்பதன் காரணமாக அதனைப் பயன்படுததி அவர்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாதநிலையே யதார்த்தமாகவுள்ளது.

அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடாக ஒரு லட்சத்து 50ஆயிரம் வழங்கப்படுகின்ற போது, ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஒரு லட்சம் மட்டுமே வழங்கபபடுகின்றது. இத்தகைய வேறுபாடுகளை அரசாங்கம் திருத்திக்கொள்ளவேண்டும்.

சொந்தக் காணிகள் இல்லாதவர்களுக்கு வாழ்வியலுக்குத் தேவையான அரசின் ஒன்றிணைக்கப்பட்ட நிதியுதவி வழங்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடித் தேவைகள் வழங்கல் அவசர தேவையாகும். நாட்டில் இடம்பெற்ற இன முரண்பாடுகள் காரணமாக குடாநாட்டில் இருக்கக்கூடிய விவசாயிகள் மற்றும் மீனவர்கள் மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை, யுத்தநிறுத்தம் போன்றவை அமுலுக்கு வந்துள்ளபோதிலும் கூட அவர்களால் தமது சொந்தக் காணிகளில் மீளக் குடியமர்வோ அல்லது தமது தொழில்களை மீளவும் ஆரம்பிக்கவோ முடியாதநிலை காணப்படுகின்றது. அதேவேளை, அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசம் உடனடியாக இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வுக்கு விடுவிக்கப்படவேண்டும். இது படிப்படியான நடவடிக்கையாகக்கூட இருக்கலாம்.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தமது பொருளாதார மேம்பாட்டுப் பணிகள் எதிலும் ஈடுபடவில்லை. அவர்களது வாழவியல் தேவைகளுக்குப் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கிய நிலையிலேயே இன்னமும் இருக்கின்றனர்.

மேலும் தற்போதுள்ள வீதிகளின் நிலைகள் மிகவும் போதாமல இருக்கின்றன. இவற்றினை ஆதாரமாகக் கொண்டு சமூக-பொருளாதாரத் தேவைகளை ஈடுசெய்ய முடியாது எனவே, இப்போதுள்ள வீதிகளை நவீனமயப்படுத்தி தரமுள்ளவைகளாக ஆக்குவதற்கு வீதி நிர்மாணத்திற்குத் தேவையான நவீன உபகரணங்களும் மூலப் பொருடகளும் போதுமனளவு கொண்டிருக்கப்படவேண்டும். அபிவிருத்தி, புனர்வாழ்வுப் பணிகளில் வீதி வலைப்பின்னல் மிகவும் முக்கிய பங்களிப்புக்களை வழங்குவதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன், யாழ்ப்பாண மாவட்டத்தில் நியாயமான போக்குவரத்துச் சேவையை ஏற்படுத்துவதற்கு வசதியாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையிடம் இருக்கும் 40பழைய பஸ் வண்டிகள் உடனடியாக அகற்றப்பட்டு, இராணுவத்தினால் பயன்படுத்தப்படும் பஸ்வண்டிகள் மீளப் பெறப்பட்டு பாவிக்கப்படவேண்டும். போதியளவு பஸ்சேவை இல்லாமையினால் பாடசாலை செல்கின்ற மாணவர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மல்லாகத்தில் அமைந்துள்ள போக்குவரத்துச் சபையின் வேலைத்தளம் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். அங்கு பஸ் வண்டிகளுக்கான மீளாக்கல் பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் உள்ளூர் அதிகார சபைகள பங்காளர்களாக இணைத்துக்கொள்ளப்படல் வேண்டும்.

மேலும் 2004ல் குடாநாட்டில் அமுல்படுத்தப்படும் வேலைத் திட்டங்களின் அமுலாக்கலை காலத்துக்குக்காலம் மேற்பார்வை செய்யவேண்டும். கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பணிகளுக்கு தேவையற்றவிதத்தில் வீண் செலவுகள் ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். அவ்வகையில் கிராமிய மட்டத்தில் சுயாதீனமானதும் காத் திரமானதுமான மேற்பார்வைசபைகள் அமைப்படல் வேண்டும என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-16)



ஆனைக்கோட்டை கூழாவடிப் பகுதியிலுள்ள ச.புலேந்திர ராஜாவின் வீட்டில் உள்ள தென்னம் பிள்ளையில் அபூர்வமாகத் தோன்றியுள்ள பிள்ளையார் முகத்தோற்றம். இதனைப் பார்ப்பதற்கும் வணங்குவதற்கும் ஏராளமான மக்கள் திரண்டவண்ணம் உள்ளனர். படம்:(ப.விஜயகுமார)

## அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ரஷ்யாவில் மரணமான சங்கைக்குரிய கங்கொடவெல சோம தேரரின் இறுதிச்சடங்கு நிகழ்வுகளின் போது இடம்பெற்ற வன முறைச் சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார் அது தொடர்பான இடைக்கால அறிக்கைகளை பொலிஸ்மா அதிபர் இந்திரா டிசில்வாவிடம் கையளித்துள்ளனர்.

இதேவேளை இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகினறமையினால் இதன் இறுதி அறிக்கைகள் அடுத்த வாரமளவிலேயே பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்படும் என, இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி யொருவர் தெரிவித்தார்.

(தி-60,10)

## ரின்னர் அருந்திய சிறுவன் வைத்தியசாலையில்

(வடலியடைப்பு)

தண்ணீர் என எண்ணி குளிர்பானப் போத்தலில் இருந்த ரின்னரைக் குடித்த சிறுவன் யாழ் போதனா வைத்தியசாலையில அனுமதிககப்பட்டுள்ளான்.

திருநெல்வேலியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

கடையொன்றில் வர்ணப் பூச்சு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில், அங்கு நின்றிருந்த எஸ்.கேதீஸவரன் என்ற சிறுவனே அருகில் குளிர்பானப் போத்தலில் இருந்த ரின்னரை அருந்தியுள்ளனான்.

இதனைக் கண்ணுற்றவர்கள் உடனடியாக யாழ் போதனா வைத்திய சாலைக்கு பிரஸ்தாப சிறுவனைக் கொண்டுசென்றனர்.

(த-21)

## இந்தியா – இலங்கை தொலைத்தொடர்பு சேவை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே கடந்த 20 வருடங்களாக இடை நிறுத்தப்பட்டிருந்த நுண் அலைத் தொலைத்தொடர்பு சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கையின் பிரதம தொலைத் தொடர்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கொழும்பிலும் புதுடில்லியிலும் இன்று வைபவரீதியாக தொலைத் தொடர்பு சேவைகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலுமதெரிவித்துள்ளார்.

(த-60,10)

நோய்நாடி நோய்முதல் நாடி
அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் -குறள்-

# வலம்புரி

## எயிட்ஸ் விழிப்புணர்வு

உலகம் முழுவதும் இன்று எயிட்ஸ் என்ற கொடிய ஆட்கொல்லி நோய்குறித்து அதிர்ச்சி அடைந்துள்ளது. இந்நோய் ஏற்பட்டால் மரணம் என்ற நிலையில் நோயின் தாக்கம் மனித சமூகத்திற்கும் பெரியதொரு சவாலாக அமைந்துவிட்டது. நடத்தைப் பிறழ்வுகளுக்கு அப்பாற்பட்ட காரணங்களும் எயிட்ஸ் தொற்றுக்கு வாய்ப்பளிக்கின்ற போதிலும், எயிட்ஸ் நோயாளி என இனம் காணப்பட்டவரை சமூகம் ஒதுக்கி வைக்கின்ற நிலைமை மிகப்பெரிய கொடூரமாக உள்ளது.

எயிட்ஸ் நோய் ஏற்பட்டவர் தீண்டத்தகாதவர் என்ற அடிப்படையில் அந்த நோயால் பாதிக்கப்பட்டவரை சமூகம் வெறுத்து ஒதுக்குகிறது. இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் எயிட்ஸ் நோய் பற்றிய போதிய அறிவின்மையே ஆகும்.

எயிட்ஸ் நோய் என்று ஏங்கிச் சாவதைவிட எயிட்ஸ் என்றால் என்ன, அதன் தாக்கம் என்ன, தொற்றும் வழிமுறைகள் யாவை, இதில் இருந்து எவ்வாறு எம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளலாம் போன்ற விடயங்களைத் தெரிந்து கொள்வதன் மூலம் எயிட்ஸ் பற்றிய பயப்பீதியைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

இதற்காக பொறுப்பான அமைப்புக்கள் செய்ய வேண்டியவை எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வை மனித சமூகத்திடையே மிக ஆணித்தரமாக ஏற்படுத்தி விடுவதாகும். அவ்வகையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவு கடந்த 24ம் திகதி முதல் இன்று 29ம் திகதி வரையான ஒருவார காலப்பகுதியை எயிட்ஸ் விழிப்புணர்வு வாரமாக பிரகடனப்படுத்தி, அக்காலப் பகுதியில் எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வை மிக வேகமாக-உற்சாகமாக-மக்களிடையே ஏற்படுத்தியமை ஓர் முக்கியமான நிகழ்வாகும்.

குறிப்பாக வீட்டுத் தரிசிப்பு, குழுக்கலந்துரையாடல் சமூகமட்டத் தலைவர்களுடனான உரையாடல், சுவரொட்டி, துண்டுப்பிரசுரம்,பிரசாரம் என்ற அடிப்படையில் விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவு முன்னெடுத்த எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வுச் செயற்பாடு நிச்சயமாக மக்களிடையே ஓர் நடத்தை சார் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இவ்வாறு ஒருவார காலப் பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட அதிரடியான பிரசார முறைமைகள் மிகப்பெரியதொரு கைங்கரியம் என்றே கூறவேண்டும்.

# அடுத்த ஆண்டில் புனர்நிர்மாணத் திட்டங்கள்

# தென்மராட்சியை நோக்கி நகர்த்தப்படும்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புனர்நிர்மாணத் திட்டங்களின் நகர்வுகள் அடுத்த வருடம் தென்மராட்சியை நோக்கி நகர்த்தப்படும். அதன் மூலம் தென்மராட்சிப் பிரதேச மக்களின் அதிகமான தேவைகள நிறைவேற்றப்படும்.

என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கடந்த சனியனறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பொது மண்டபத்தில் நடாத்தப்பட்ட தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தி பற்றிய கூட்டத்தில் உரையாற்றும போது தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தென்மராட்சிப் பிரதேச அரசியல துறையினரால் ஏற்பாடு செயயப்பட்ட இக் கூட்டம் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் இடம் பெற்றது.

அரச அதிபர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

யுத்தத்தின் பின்னர் சமாதானத்தை நோக்கிச் செல்கின்ற சூழ்நிலை பல்வேறு சிக்கல்கள் நிறைந்ததாகக் காணப்படுகிறது. யுத்தம் முழுமையாக நிறுத்தப்படவில்லை. அதே போல சமாதானமும் முழுமையடையவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டதன் பினனர் இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் யூ.என். எச்.சி.ஆர் நிறுவனமும் இணைந்து புனாவாழ்வுக்கான திட்டத்தினை பிரதேச செயலகங்கள் ரீதியாக இனங் கண்டது. அவை இன்னமும் பட்டியலாகவே இருக்கின்றன.

ஒஸ்லோ, டோக்கியோ போன்ற இடங்களில் ஆராயப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களுக்கான நிதி இன்னமும் கிடைக்கவில்லை. இன்னிலையில், அமைச்சர் மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் யாழப்பாண மாவட்டத்தின் நிலை பற்றி பிரதமரிடம் எடுத்துக் கூறியிருந்ததைத் தொடர்ந்து, பிரதமர் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு துரித அபிவிருத்தித் திட்டமொன்றை தயாரிக்க உரிய பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்படட குடும்பங்களுக்கு உதவக்கூடிய வகையில் இலங்கை அரசாங்கம் இதுவரை எந்தவித நிதியையும் வழங்கவில்லை. சில வெளிநாடடு அமைப்புகளிடம் இருந்து மட்டுமே நிதிவளம் கிடைத்துள்ளது.

தென்கிழககாசியாவின சாக்கடையாக யாழ்ப்பாணத்தை மாற்றிக்கொள்வது எமது நோக்க மல்ல. இங்கு புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஆயினும் கட்டட நிர்மாணத்துக்கான கல், மண் போன்றவை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்கள் காணப்படுகின்றன. நாம் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளோம். கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு உரியதகுதி மிக்க ஒப்பந்த காரர்கள் இங்கு இல்லாமல் இருக்கின்றது. இதனால பாரிய கட்டடங்களை நிர்மாணிக்க முடியாதுள்ளது.

வெளிநாட்டில் இருந்து வாழும் எம்மவர்கள் தமது வீடுகளை புனரமைப்புச் செய்கின்றபோது அவர்களால் கூலிக்கு அமர்த்தபபடுபவர்களுக்கு கூடுதலான கூலிப்பணத்தைக் கொடுத்துப் பழக்கியுள்ளதால் அதேபோன்ற கூலியையே மாவட்ட மக்களிடம் இருந்தும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். நாம் இலட்சியமான கருத்துககளையும், வரவசனங்களையும் பேசலாம். ஆயினும் அதன்மூலம் மக்களின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. நடைமுறை சாத்தியமான வழிகளில் நாம் சிந்திக்க வேண்டும் செயறபடவேண்டும்.

இந்த வகையில் தென்மராட்சிப் பிரதேசம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், தேவைகள் பற்றி நன்கு ஆராய்ந்து 2004ஆம் ஆண்டுக்கான பூரணத்துவமிக்க திட்டங்கள் தயாரித்து அமுல்படுத்தப்படும் எனக் குறிபபிட்டார்.

இக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவீராஜ், யாழ். மாவடட அரசியல்துறையின் துணைப்பொறுப்பாளர் செம்மனன, திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம் பிள்ளை, தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்த விஜிதரன், தென்மராட்சிப் பிரதேச பொறுப்பாளர் கலைவாணன் மற்றும் அனைத்துத திணைக்களங்களின் தலைவர்களும் பங்குபற்றியிருந்தனர்.

இக் கூட்டத்தில தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவையினர், அதிபர்கள், ஆசிரியர்கள், கூட்டுறவாளர்கள், கிராம சேவையாளர் என சுமார் 500ற்கும் மேற்பட்டோர் பங்குபற்றியிருந்தனர். (த-16)

## நந்தகுமாருக்கு பேராசிரியர் விருது

(கொழும்பு)

கொழும்பு றோயல் கல்லூரியின் ஆசிரியர் கலாநிதி குமாரசுவாமி நந்தகுமாருககு ஜப்பானின் தற்காப்புகலைகளுக்கான சர்வதேச நிறுவனம் பேராசிரியர் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

இவர் றோயல் கல்லூரியின் குத்துச்சண்டைப்பரிவுக்கு பொறுப்பாகச் செயறபட்டுவருகிறார். (த)

## மீனவர் குழுக்களுக்கிடையில் மோதல்

# கண்டல்குழியில் கைக்குண்டு வீச்சு

## பதினெட்டுப் பேர் படுகாயம்

(புத்தளம்)

கற்பிட்டி கண்டல்குழிப் பகுதியில் இருமீனவர் குழுக்களுககிடையில் இடம்பெற்ற வாக்குவாதம், முற்றியநிலையில் அப்பகுதியில் கைக்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் இடமபெற்ற மேற்படி கைக்குண்டுத் தாக்குதலில் 3சிறுவர்கள் உட்பட 18பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் உடனடியாக கற்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில சிலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதால், அவர்கள் அவசர சிகிச்சைக்காக புத்தளம் மற்றும் சிலாபம் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கற்பிட்டி மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.கணேஸ் தெரிவித்தார்.

இக் கைக்குண்டுத் தாக்குதலை அடுத்து நீர்கொழும்பு, கற்பிட்டி மற்றும் கண்டல் குழிப பகுதியில் பெரும் முறுகல் நிலையும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது. அத்துடன், இப்பகுதிகளிலுள்ள கடைகள், மீன் வாடிகள் உட்பட அரச மற்றும அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

இச்சம்பவத்துடன் தொடர்புடையோரைக் கைதுசெய்ய பொலிஸார் தேடுதல் நடத்தி வருவதுடன், இது தொடர்பான தீவிர விசாரணைகளையும் மேற கொண்டு வருகின்றனர்.(ந-15)

## அறிவுறுத்தலை மீறும் வர்த்தகர்

# காலாவதியான பொருட்கள் பற்றி

# விழிப்பாக இருக்க வேண்டுகோள்

(சுதுமலை)

நலலூர் பிரதேச சபைக்குடபட்ட திருநெல்வேலி மற்றும் கொக்குவில் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகாகள் குழுவொன்று கடந்தவாரம் திடீர்ச் சோதனைகளை மேற்கொண்டது.

இதன்போது, பல வர்த்தக நிலையங்களில் காலாவதியான பெருமளவு பிஸ்கட்டுகள் மற்றும் இனிப்பு வகைகள் என்பன பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கைப்பற்றப்படடுள்ளதுடன், அவ் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்யப் பட்டுள்ளது.

மேலும் தவறான லேபிள்கள் ஒட்டப்பட்ட நிலையிலும் லேபிள்கள் அற்றநிலையி லுளளதுமான பொருட்கள் வர்த்தக நிலையங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமையும் பொதுச் சுகாதாரப் பரிசோதகாகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பலமுறை வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழஙகப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருவது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், இது விடயத்தில் பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறு சுகாதாரப் பகுதியினா் வேண்டுகோள விடுத்துள்ளனர். (த-252)

## தினசரி தியானம்

### நல்லார் இணக்கம்

சொல்வது யார்க்கும் எளிது. ஆனால் செயல்படுத்துவது எளிதன்று. தன்னடக்கம், பற்றற்ற தன்மை, துறவு, தியானம், சமாதிநிலை ஆகியவை பற்றிப் பேசுவது எளிது. உணர்ச்சிகளின் பிடியில் இருக்கும் போது இவற்றைச் செயல்பாட்டுக்குக் கொண்டுவருவது எளிதாகாது. இந்த நல்லொழுக்கங்களை வளர்த்துக் கொள்வதற்கு நல்லார் இணக்கம் மிகவும் தேவையாகும்.

சுவாமி சிவானந்தர்

# ஆட்டோ மோதி இராணுவ

# பொலிஸ் அதிகாரி மரணம்

(புத்தளம்)

முச்சக்கரவண்டி மோதியதில் இராணுவப் பொலிஸ் அதிகாரி ஒருவர் அவ்விடத்திலேயே பரிதாபகரமாக மரணமானார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு முந்தல் பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் யூட்பிரியந்த (வயது 22) என்ற இராணுவப் பொலிஸ் அதிகாரியே மரணமானவராவாா.

சிலாபத்திலிருந்து புத்தளம் நோக்கிச் சென்றுகொண்டிந்த முச்சக்கரவண்டி வீதியைக் குறுக்காகக் கடக்க முயன்ற பிரஸ்தாப அதிகாரியை மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.(இ-15)

# பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழககு மாகாண அரச பொதுச்சேவை ஆணைக் குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாண அரச பொதுச்சேவை ஆணைக் குழுவின் புதிய தலைவராக வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் எம்.எம்.மன்சூரும், உறுப்பினர்களாக இந்து கலாசார அமைச்சின் முன்னாள் பணிப்பாளா. கே.தயாபரன், ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி பி. சி.இம்புல் தெனிய ஆகியோரும் மாகாண ஆளுநர் அசோகா காந்திலாலால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 2004ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 5ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் வகையில் இவர்களுக்கான இந்நியமனங்கள் வழக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-18)

பாதுகாப்பு அமைச்சைக் கையளிக்காவிட்டால்

# சமாதானமுயற்சியில் இருந்து பிரதமர் விலகிக் கொள்வார்

## வெளிவிவகார அமைச்சர் டிரோன் தெரிவிப்பு

(கோலாலம்பூர்)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் பறித்தெடுக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் பொறுப்புக்களை மீண்டும் பொறுப்பேற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஒருபோதும் கைவிடமாட்டார் என்று வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ மலேசியா கோலாலம்பூரில் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு மலேசியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கோலாம்பூரில் செய்தியாளர் மத்தியில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியாளர் மத்தியில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்;

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் பொறுப்புக்கள் தன்னிடமே இருக்கவேண்டும் என்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உறுதியாக உள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் பொறுப்புக்கள் மீண்டும் பிரதமரிடம் ஒப்படைக்காவிட்டால் அவர் சமாதான நடவடிக்கைகளின் பொறுப்புக்களில் இருந்து விலகிக் கொள்வார். பாதுகாப்பு அமைச்சு யாரிடம் இருக்க வேண்டும் என்பது பற்றி பிரதமரும் ஜனாதிபதியும் தற்போது பேச்சு நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கைக்கு நிதியுதவி வழங்க முன்வந்த நாடுகள் பொறுமை காக்கவேண்டும் எனவும் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

# பொலிஸ் உத்தியோகத்தர் நெடுந்தீவில் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் குருநாகலைச் சேர்ந்த எம்.பிரேமரட்ண(வயது38) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

கழுத்துப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் காணப்படும் இவரது சடலத்தை நெடுந்தீவுப் பொலிஸார் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

பிரேதப் பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளைத் தொடர்ந்து சடலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-4)

## திருவாதிரை உற்சவம்

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பர திருவாதிரை உற்சவம் இன்று காலை 7 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும் இவ் உற்சவத்தில் 9ம் நாள் பஞ்சரத பவனி இடம்பெறும். இவ் உற்சவ காலத்தை யொட்டி வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர்ச் சாலை விசேட போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. (ச-246)

## ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் கோட்ட அரசியல் பிரிவின் எயிட்ஸ் தடுப்புப் பரப்புரைப் பணியில் ஈடுபட்டு சேவை உறுதிப்பாட்டுக் கடிதம் வழங்கப்பட்ட அனைவரையும் நாளை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கேட்போர் கூடத்தில் ஒன்று கூடுமாறு யாழ். நல்லூர் கோட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (ச)

# தென்மராட்சிப் பிரதேசம் அடுத்த ஆண்டில் புனரமைப்பு

## யாழ்.அரச அதிபர் உறுதி

(யாழ்ப்பாணம்)

அரசின் போதிய நிதி ஒதுக்கீடுகள் இன்றி, அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடனேயே புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருவதாக யாழ்.அரச அதிபர் எஸ்.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி பிரதேசத்தின் அபிவிருத்தி திட்டங்களை இனம் காணும் செயலமர்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இச் செயலமர்வு தென்மராட்சிப் பிரதேச செயலர் ஸ்ரீனிவாசன் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

யப்பானில் அணுகுண்டு வீசி அழிக்கப்பட்ட நகரங்களைப் போன்று தென்மராட்சிப் பிரதேசம காணப்படுகிறது. அடுத்த ஆண்டிலிருந்து அதனைப் புனரமைப்புச் செய்வதற்கு பூரண நடவடிக்கை எடுக்கப்படுமென அரச அதிபர் தெரிவித்தார்.

இச் செயலமர்வில் யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை, கமநலசேவைப் பணிப்பாளர் சுந்தரேசன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சிவபாலன், யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இச் செயலமர்வு பி.ப.3.00 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் நடைபெற்றதாக தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் பா.கனகலிங்கம் தெரிவித்துள்ளார். (ச)

## பேராதனை புதுமுக மாணவர்களுக்கு

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான பொறியியல் பீட புதிய மாணவர்களை எதிர்வரும் 11ம் திகதி பொறியியல் பீடத்திற்கு சமுகமளிக்குமாறு பல்கலைக்கழக பதிவாளர் கேட்டுள்ளார்.

புதிதாக தெரிவாகியுள்ள மாணவர்களுக்கு முதல் இரு மாதங்களுக்கு விடுதி வசதி எதுவும் வழங்கப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-60,10)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(வடலியடைப்பு)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் இடம் பெறவுள்ளது. (த-21,75)

## இணைந்த சேவை அலுவலர்களின் இடமாற்றம் மார்ச்சில் அமுல்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண இணைந்த சேவை அலுவலர்களுக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சினால் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்கள் இரண்டு மாதங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

மார்ச் மாதம் முதலாம் திகதியில் இருந்து இடமாற்றம் நடைபெறும் எனவும் அவர் மேலும தெரிவித்தார். (ந-60,10)

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 43 தொழிலாளர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு புதிதாக 43 சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் நிலவி வந்த தொழிலாளர் பற்றாக்குறை இந் நியமனத்தின் மூலம் நிவர்த்தி

வி.மகாலிங்கம், கே.அற்புதராணி, பி.காந்திமதி, கே.ரகுநாயகி, ஆர்.கிருஸகுசி, எஸ்.மதிவதனி, கே.கோமளசெல்வி, எஸ்.ஜெகதீஸ்வரி, ஜி.தேவமலர், எம்.சுகந்தினி, என்.சசிகலா, வி.நவீனா, மனோகரன் யசோதரன், எஸ்.தவகுமார்,

ரி.ஐங்கரன், ஏ.மனோகரன், என்.குகதாசன், எம். லொறாந்தஸ், ஜே.ஈ. கொலியன், எஸ்.சிறிதரன், ஜே.ஜெயக்குமார், எஸ்.சசிக்குமார், எஸ.தவராஜா, பி.புஸ்பராஜா, கே.கதாதரன், ஏ.தேவமூர்த்தி. ஏ.எட்மன் கெனடி, பி.ஜயசங்கர்,

## வெளி....

ளுக்குத் தேவையான ஆலோசனை மற்றும் பயிற்சிகளை வழங்கத் தாம் தயாராக இருப்பதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.(ந-60,10)

## முன்னாள்..

இக் கலந்துரையாடலில் யாழ்.

அரசு பூரண கவனம் செலுத்தாவிடின் தான் பதவியை இராஜினாமாச் செய்யப் போவதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்

கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் நிலவி வந்த தொழிலாளர் பற்றாக்குறை இந் நியமனத்தின் மூலம் நிவர்த்தி செய்யப்படுவதாக வைத்திய சாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம் தெரிவித்துள்ளார்.

புதிதாக நியமனம் பெற்றவர்கள் உடனடியாக தமது நியமனங்களைப் பெற்று கடமைக்கு சமுகமளிக்குமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார்.

புதிதாக நியமனம் பெற்ற 43 சுத்திகரிப்பு தொழிலாளர்களின் பெயர் விபரம் வருமாறு;

அந்தோனி ரெற்சலா, செல்வராசா மைதிலி, கே.லோகநாயகம், கே.கோமளசெல்வி, எஸ்.ஜெகதீஸ்வரி, ஜி.தேவமலர், எம்.சுகந்தினி, என்.சசிகலா, வி.நவீனா, மனோகரன் யசோதரன், எஸ்.தவகுமார், கே.சத்தியசீலன், ஏ.முரளீதரன், வி.தயாளசிவம், எஸ்.மதனரூபன், எம்.பாஸ்கரன், ரி.யோகநாதன், ஜே.ஜெயக்குமார், எஸ்.சசிக்குமார், எஸ.தவராஜா, பி.புஸ்பராஜா, கே.கதாதரன், ஏ.தேவமூர்த்தி. ஏ.எட்மன் கெனடி, பி.ஜயசங்கர், கே.யோகேஸ்வரன், ஏ.விஜிதராஜா, ஏ.குணதீபன், ஜே..கோமதி, ஆர்.தவச்செல்வி, கே.கங்கேஸ்வரன். (ச)

A/L 2006
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஜனவரி – 10
சனி காலை
8 மணி
DMI
யாழ் நகர்
(சி-7069)

# தேர்தல் ஆண்டாக....

ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ளமையாலேயே சமாதான முயற்சிகள் குழம்பியுள்ளன என்ற பிரதமரின் குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை.

பாதுகாப்பு, உள்துறை, மக்கள் தொடர்பாடல் ஆகிய மூன்று அமைச்சுக்களையும் நான் பொறுப்பேற்பதற்கு முன்னரே சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடை நிறுத்தப்பட்டு விட்டது. டி.பி.விஜதுங்கா முன்னர் ஜனாதிபதி பதவியை வகித்த காலப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சசையும் தானே பொறுப்பேற்று நடத்தி வந்தார். அவ்வாறான சூழ்நிலையிலும், 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதகாலப் பகுதியில் விடுதலைப் புலிகளுடன் அப்போதைய பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். ஆயினும் தற்போது நாட்டின் முக்கிய மூன்று அமைச்சுக்களை நான் பொறுப்பேற்றுள்ளமையைக் காரணம் காட்டி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லாமல் இருந்து வருகிறார். இது பிரதமரின் பொறுப்பற்ற தன்மையை வெட்ட வெளிச்சமா கக் காட்டுகின்றது.

நிரந்தர சமாதானம் ஒன்றிற்காக ஏங்கிக் கொண்டிருக்கும் மக்கள் பிரதமரின் இத்தகைய அசமந்தப் போக்கினால் அதிருப்தியும் கவலையும் அடைந்திருக்கின்றனர்.

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் அபாயம் இருப்பதாக பலராலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த காரணத்தினாலேயே நான் இம் மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்றுள்ளேன். இதனைத் தவறாகப் புரிந்து கொண்ட அரசியல்வாதிகள் குறிப்பாக ஆளும்தரப்பு அரசியல்வாதிகள் சிலர் சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்காகவே நான் இத்தகைய நடவடிக்கை எடுத்திருப்பதாக பிரசாரம் செய்துவருகின்றனர். ஆனால் நான் மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்பதற்கு எட்டு மாதங்களுக்குமுன்னரே அரசுக்கும் புலிகளுக்கு மிடையிலான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து விட்டன.இதனை நாட்டு மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

எதுவாயினும் பிறக்கப் போகும் புத்தாண்டு தேர்தல்கள் ஆண்டாகவே மலரப்போகின்றது என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ந-60,10)

# முன்னாள்..

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டப் பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், மனித நேய அமைப்புக்களின் தலைவர்கள், யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக் கலந்துரையாடலில் இறுதியில் திட்டமதிப்பீடுகளும் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை எதிர் வரும் 31ந் திகதிக்கு முன்னர் யாழ்.குடாநாட்டின் அபிவிருத்திகள் தொடர்பாக அரசு பூரண கவனம் செலுத்தாவிடின் தான் பதவியை இராஜினாமாச் செய்யப் போவதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பாராளுமன்றில் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-43)

THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆண்டு 1ல் இருந்து மேற்படிப்பு வரை SPOKEN ENGLISH, GRAMMAR ஒரு வகுப்பில் 15 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப் படுவர்.
ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி
பிளாக் வீதி, சங்கானை
(8066)

எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து
உங்கள் வலம்புரியில்
வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
எழுதிய
தேச வழமை

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.